இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 40 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 02 – புதன்கிழமை 18 செப்டம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 40 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 02 - Wednesday 18 September 2024 - Madurai 12 Pages ₹ 5.00

## சுயமரியாதை என இனமான உணர்வூட்டி நிமிர் நடை போடவைத்த

# பகுத்தறிவுப் பகலவனுக்குப் புரட்சி வணக்கம்!



தந்தை பெரியார் அவர்களின் 146-வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2024) சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## தந்தை பெரியார் 146–ஆவது பிறந்த நாளையொட்டி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, செப். 18 -**

**“சுயமரியாதை என இனமான உணர்வூட்டி, நிமிர் நடை போட வைத்த பகுத்தறிவுப் பகலவனுக்குப் புரட்சி வணக்கம்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

தி.மு.க. பவள விழா முப்பெரும் விழா, சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த விழாவில் தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, மு.க.ஸ்டாலின் விருது ஆகிய விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

செப்டம்பர் 15 தி.மு.க. எனும் மாபெரும் இயக்கத்தை உருவாக்கித் தந்து, இந்த மாநிலத்தின் உரிமைகளைக் காத்து, ‘தமிழ்நாடு’ என்று நம் மாநிலத்திற்குப் பெயர் சூட்டிய தென்னாட்டு காந்தி, திராவிட புத்தர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள். செப்டம்பர் 17 – கொள்கைப் பேராசான் – பகுத்தறிவுப் பகலவன் – தந்தை பெரியார் பிறந்த நாள். அதே நாள்தான், ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்கிற மாபெரும் மக்கள் எழுச்சி பேரியக்கம் தொடங்கப்பட்ட நாள்.

இந்த மூன்றையும் இணைத்து, ‘முப்பெரும் விழா’ என்று பெயர்சூட்டி திராவிடத் திருவிழாவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணாவால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தி.மு.க. 75 ஆண்டுகளாக மக்களுக்குப் பணியாற்றி, தி.மு.க பவள விழாவைக் கொண்டாடுகிறது. தி.மு.க. வரலாற்றில் முப்பெரும் விழா வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாகும். அதன்படி, தி.மு.க. பவள விழா முப்பெரும் விழா சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் எழிலார்ந்த முறையில் நேற்று மாலை நடைபெற்றது. தி.மு.க. பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார். தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று முப்பெரும் விழா விருது மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

தி.மு.க. முப்பெரும் விழாவில், பெரியார் விருது பாப்பம்மாளுக்கும், அண்ணா விருது அறந்தாங்கி மிசா இராமநாதனுக்கும், கலைஞர் விருது எஸ்.ஜெகத்ரட்சகனுக்கும், பாவேந்தர் விருது கவிஞர் தமிழ்தாசனுக்கும், பேராசிரியர் விருது வி.பி.இராஜனுக்கும், தி.மு.க. தனது 75வது பவள விழாவைக் கொண்டாடும் சிறப்புமிகு காலத்தில், தி.மு.க.வை 6 வது முறையாக ஆட்சியில் அமர வைத்து, இந்தியாவே போற்றும் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெயரிலான விருதும் இந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டது. அதன்படி, நடப்பாண்டுக்கான மு.க.ஸ்டாலின் விருது தஞ்சை எஸ்.எஸ்.பழனிமாணிக்கத்துக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் இ.பெரியசாமி, அமைச்சர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இம்முப்பெரும் விழாவில் கலைஞர் அறக்கட்டளை சார்பில் தி.மு.க. விருதுக்காக தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று, பண முடிப்பும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

### தந்தை பெரியார் பிறந்த நாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

இதனிடையே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியார் பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவு வருமாறு:-

**புரட்டுக் கதைகளுக்கும் வறட்டு வாதங்களுக்கும் வளைந்து கொடுக்காதீர்கள்.**

**எல்லாவற்றுக்கும் மேலானது சுயமரியாதை என இனமான உணர்வூட்டி நிமிர்நடை போட வைத்த பகுத்தறிவுப் பகலவனுக்குப் புரட்சி வணக்கம்!**

**இன்று உலகம் முழுவதும் தமிழர் உயர்ந்த நிலைகளில் இருப்பதற்கு, தந்தை பெரியாரின் சிந்தனையும் உழைப்புமே அடித்தளம்!**

**ஆயிரமாண்டு மடமையைப் பொசுக்கிய அவரது அறிவுத்தீதான், நமது பாதைக்கான வெளிச்சம்! அந்த வெளிச்சத்தில் சமத்துவ உலகத்தை நிறுவுவதே நமது தலையாய பணி!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தந்தை பெரியார் சிலைக்கு முதலமைச்சர் மலர் தூவி மரியாதை!

முன்னதாக தந்தை பெரியார் அவர்களின் 146வது பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை அண்ணா சாலை சிம்சன் அருகே உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். சிலைக்கு கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு முதலமைச்சர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ணட கழக துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற- நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னணித் தோழர்கள் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

### தந்தை பெரியார் - சமூக நீதி உறுதிமொழி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளில் சமூக நீதி நாள் – உறுதிமொழி ஏற்கப்படும் என்று அறிவித்த தற்கிணங்க தமிழ்நாடு முழுவதும் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை சமூக நீதி நாளாக உறுதிமொழி கழகத்தினர் – முன்னணியினர் ஏற்றுக் கொண்டனர்.

## முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது! அரசாணை வெளியீடு!

சென்னை, செப். 18-

நீர்நிலைகளை பராமரிப்பதில் சிறப்பாக செயல்படும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தனி நபர்களுக்கு “முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர்” விருது வழங்க தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

நீர்நிலைகளை பாதுகாக்கும் பணியில் செயல்படுபவர்களை அங்கீகரிக்கும் விதமாக முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது வழங்கப்படும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

அதனை நடைமுறைப்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், நீர்நிலைகளை பராமரிப்பதில் சிறப்பாக செயல்பட்டு வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தனி நபர்களுக்கு முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 38 மாவட்டத்திற்கு 38 பேருக்கு விருது வழங்கப்பட உள்ளதாகவும், விருது பெறுபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத்தொகை என்ற அடிப்படையில் 42 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### சென்னை

## ரயில்களில் முன்பதிவில்லா பெட்டிகள் அதிகரிப்பு!

சென்னை, செப். 18 –

தெற்கு ரயில்வேக்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் 15 ரயில்களில் வரும் ஜனவரி மாதம் முதல் முன்பதிவில்லா பெட்டிகளின் எண்ணிக்கையை 4 ஆக அதிகரிப்பதாக தெற்கு ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. இதில், சேலம் வழியே இயங்கும் 5 ரயில்களில் முன்பதிவில்லா பெட்டிகள் 4 ஆக அதிகரிக்கப்படுகிறது. இதன்படி, சென்னை சென்ட்ரல்–ஈரோடு ஏற்காடு எக்ஸ்பிரசில் (22649, 22650) இருமார்க்கத்திலும் முறையே வரும் ஜனவரி 20, 23ம் தேதி முதல் முன்பதிவில்லா பெட்டிகளின் எண்ணிக்கை 3ல் இருந்து 4 ஆக அதிகரிக்கப்படுகிறது.

இதேபோல், சென்னை சென்ட்ரல் – நாகர்கோவில் வாராந்திர எக்ஸ்பிரசில் (12689, 12690) இருமார்க்கத்திலும் வரும் ஜனவரி 17, 19ம் தேதி முதலும், சென்னை சென்ட்ரல் – திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் (12695, 12696) இருமார்க்கத்திலும் வரும் ஜனவரி 22, 23ம் தேதி முதலும் முன்பதிவில்லா பெட்டிகளின் எண்ணிக்கை 3ல் இருந்து 4 ஆக அதிகரிக்கப்படுகிறது.

### டெல்லி முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார் கெஜ்ரிவால்!

## புதிய முதலமைச்சராக ஆதிஷி மர்லேனா இன்று பதவி ஏற்பு!

### ஆம் ஆத்மி தகவல்!

புதுடெல்லி, செப். 18-

டெல்லி முதலமைச்சர் பதவியிலிருந்து கெஜ்ரிவால் விலகிய நிலையில், புதிய முதலமைச்சராக அம்மாநில அமைச்சர் ஆதிஷி மர்லேனா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

டெல்லி மதுபானக் கொள்கை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் நிபந்தனையுடன் ஜாமின் வழங்கியது. முதலமைச்சர் பணியை ஆற்றவிடாமல் பல்வேறு நிபந்தனைகளுடன் உச்சநீதிமன்றம் ஜாமின் வழங்கியது.

இதையடுத்து முதலமைச்சர் பதவியிலிருந்து விலக உள்ளதாக கெஜ்ரிவால் தெரிவித்தார்.



பதவியிலிருந்து விலகிய நிலையில், ஆம் ஆத்மி கட்சியின் எம்.எல்.ஏக்கள் கூட்டம் நேற்று காலை நடைபெற்றது. கெஜ்ரிவால் இல்லத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், புதிய முதலமைச்சராக அமைச்சர் ஆதிஷி மர்லேனா பெயர் முன்மொழிந்து பரிந்துரைக்கப்பட்டது.

கெஜ்ரிவாலின் முன்மொழிவு மற்றும் பரிந்துரைக்கு ஆம் ஆத்மி கட்சி எம்.எல்.ஏ.,க்கள் ஒருமனதாக ஆதரவு தெரிவித்தனர்.

இதனையடுத்து, புதிய முதலமைச்சராக ஆதிஷி தேர்வு செய்யப்பட்டார். இதற்கான பரிந்துரைக் கடிதம் டெல்லி ஆளுநருக்கு ஆம் ஆத்மி கட்சி சார்பில் அனுப்பப்படும். அவர் அதனை ஏற்ற பின்பு, இன்று பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வின் சுஷ்மா சுவராஜ், காங்கிரஸ் கட்சியின் ஷீலா தீட்ஷித் ஆகிய இருவரை தொடர்ந்து டெல்லியின் 3வது பெண் முதலமைச்சராக ஆதிஷி பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உத்தரகாண்ட் நிலச்சரிவில் சிக்கி மீட்கப்பட்டவர்கள் சென்னை திரும்பினர்!

## பாதுகாப்பாக அழைத்து வந்த தமிழ்நாடு அரசிற்கு நெஞ்சார்ந்த நன்றி!

*சென்னை, செப். 18-*

*உத்தரகாண்ட் நிலச்சரிவில் சிக்கி மீட்கப்பட்ட சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த 30 பேர் பத்திரமாக தாயகம் திரும்பினர்.*

*கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் இருந்து உத்தராகண்ட் மாநிலம், ஆதிகைலாஷ் கோயிலுக்கு கடந்த 1ம் தேதி ஆன்மிக சுற்றுலா சென்ற 30 பேர், அங்கு ஏற்பட்ட நிலச்சரிவால், சாலைகள் துண்டிக்கப்பட்டு சொந்த ஊருக்கு திரும்ப முடியாமல் சிக்கி தவித்தனர். இது குறித்து தகவல் அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவர்களை மீட்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள், உத்தராகண்ட் மாநில அரசை தொடர்பு கொண்டு, அவர்களை உடனடியாக மீட்க வலியுறுத்தினர். இதனையடுத்து நிலச்சரிவில் சிக்கி கொண்ட 30 தமிழர்களும் ஹெலிகாப்டர் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர். இந்த நிலையில் ரயில் மூலம் 20 பேரும், விமானம் மூலம் 10 பேரும் சென்னை அழைத்து வரப்பட்டனர். உரிய நடவடிக்கை மேற்கொண்டு தங்களை பாதுகாப்பாக அழைத்து வந்த தமிழ்நாடு அரசிற்கு அவர்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.*